# ★ மணலாறு அதிரடியில் 4 இராணுவம் பலி!

(மணலாறு)

மணலாறு சிலோன் தியேட்டர்ஸ் இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள நான்கு இராணுவ காவலரண்கள் மீது மீது நேற்றுமுன்தினம் இரவு விடுதலைப்புலிகள் மேற்

(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 03 இதழ் 281

யாழ்ப்பாணம் புதன்கிழமை 18 — 11 — 1992


## 3 புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

மணலாறு மற்றும் இளவாலைப் பகுதியில் அரசபடையினருடன் நேற்று முன்தினம் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 3 போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.

லெப். கரிகாலன் (ஆறுமுகம் சாந்தகுமார்) வவுனியா. வீரவேங்கை அண

(4-ம் பக்கம் பார்க்க)

## கிண்ணியாவில் புதிய இராணுவ முகாம்

(கொழும்பு)

மட்டக்களப்பு கிண்ணியாப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புதிய இராணுவ முகாம்ஒன்றை அமைத்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

# கடற்படைதளபதியின்கொலையை பொறுப்பேற்று

# 'பிரேமா' உடன்பதவிவிலகுமாறு

# எதிர்க்கட்சிகள் வலியுறுத்து!

## தலைநகரில் பாதுகாப்பு வழங்க அரசு தவறிவிட்டதாகவும் குற்றச்சாட்டு!!

(கொழும்பு)

**கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோவின் கொலையைப் பொறுப்பேற்று, ஜனாதிபதி பிரேமதாசாவை உடனடியாகப் பதவி விலகுமாறு எதிர்க் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. இதேவேளையில் நாட்டுக்கும், மக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதில் அரசு தவறிவிட்டதாகவும் எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் போது, கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ உட்பட நான்கு கடற்படை அதிகாரிகள் கொல்லப்பட்டமைக்கு ஜனாதிபதி பிரேமதாசாவே காரணம். எனவே பாதுகாப்பு அமைச்சர், முப்படைகளின் தலைமைத் தளபதி என்ற முறையில் இக்குற்றச்சாட்டை ஏற்றுகொண்டு, உடனடியாக அவர் பதவி விலகவேண்டும் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா கேட்டுள்ளார்.

படை உயர் அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு வழங்க அரசு தவறிவிட்டது. இது ஒரு பாரதூரமான சம்பவம்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்கம் சக்திவாய்ந்த தற்கொலைப் படையாக மாறி வருகிறது

(கொழும்பு)

உலகில் மிகவும் சக்திவாய்ந்த தற்கொலைப்படையாக விடுதலைப் புலிகள் இயக்கம் மாறியிருப்பதாக அரசியல் செய்தியாளர்கள் தெரிவித்தாக 'ஏ.எப்.பி' செய்தி ஸ்தாபனம் கூறியுள்ளது.

யாழ்ப்பாணம் மீது தங்கள் இறுதித்தாக்குதலை நடாத்த முப்படையினரும் திட்டங்களை தயாரித்து தயார் நிலையில் உள்ள இவ்வேளையில் இத்திட்டத்திற்கு எச்சரிக்கைதரும் வகையில் புலிகள் இதனை

(4-ம் பக்கம் பார்க்க)

## மீனவர் மீது கடற்படை சூடு

(புலோலி)

பருத்தித்துறை கடலில் மீனவர்கள் மீது கடற்படையினர் நேற்றுக்காலை துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவத்தில் சக்

(4ம் பக்கம் பார்க்க)

## இரண்டுஅடி தூரத்திலேயே குண்டு வெடிக்கப்பட்டது

(கொழும்பு)

கடற்படை தளபதி கொல்லப்பட்ட தற்கொலைப் படைத்தாக்குதலில் காருடன் மோட்டார் சைக்கிள் மோதியதாக வந்த செய்தி தவறெனவும் காரிலிருந்து சுமார் 2 அடி தூரத்திலேயே தற்கொலைப்படைவீரர்சக்தி மிக்க குண்டை வெடிக்க வைத்தார் என பொலிஸார் நேற்று தெரிவித்தனர்

இச்சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளின் சகல பகுதிகளும்

(4-ம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப் படை வீரர் அடையாளம் ஊர்ஜிதம்

(கொழும்பு)

கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோவின் கொலைச் சம்பவத்தின் தற்கொலைப் படைவீரர், யாழ்ப்பாணம் காங்கேசன் துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் லோகமோகன் (22 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் கொழும்பு விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று அறிவித்தனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ சிப்பாயை நீதிமன்றில் ஆஜராகுமாறு மஜிஸ்திரேட் உத்தரவு

(கொழும்பு)

குண்டு வெடிப்பில் காலமான கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோவின் காருக்கு பாதுகாப்பு வழங்கிச் சென்ற வாகனத்தில் பயணம் செய்த இராணுவச் சிப்பாய் ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது,

கடற்படைத்தளபதியின் மரண விசாரணையை நடத்தி வரும் மாஜிஸ்திரேட் மேற்படி சிப்பாயை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## நியூஸிலாந்து அணியின் கிரிக்கெட் சுற்றுப்பயணம் தடையின்றி நடைபெறும்

(கொழும்பு)

இலங்கையில் சுற்றுப்பயணத்தை தொடர்ந்தும் நியூசிலாந்து அணி மேற்கொள்ளுமென நியூசிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் பீற்றர் மக்னமட் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

கடற்படைத்தளபதி கொலைப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து தங்கள் 2 மாத காலசுற்றுப்பயணத்தை ரத்துச் செய்து நியூசிலாந்து அணி நேற்று நாடு திரும்பவிருந்தது.

எனினும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் அரசு அதிகாரிகளும் வலியுறுத்திக் கேட்டதற்கிணங்க இது பற்றி ஆராய நியூ சிலாந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளபதியின் இறுதிச்சடங்கு நாளை நடைபெறும்

(கொழும்பு)

கொழும்பில் தற்கொலைப் படைவீரர் ஒருவரால் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி கொல்லப்பட்ட கடற்படை தளபதி ரியர் அட்மிரல கிளான்ஸி பெர்ணண்டோவின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை கனத்தையை மயானத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் நடைபெறும்.

(4ம் பக்கம் பார்க்க)

## படை உயரதிகாரிகளின் பாதுகாப்பு மீளாய்வு

(கொழும்பு)

பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பாதுகாப்புபிரிவு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்ணண்டோ கடந்த திங்கட்

(4-ம் பக்க பார்க்க)

## போரைத் திசை திருப்புவதாகவும் பாதுகாப்புக்கு சவாலாகவும் உள்ளது!

(கொழும்பு)

கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்ணண்டோவின் கொலை, வடக்கு-கிழக்கு யுத்தத்தைத் திசை திருப்புவதாக அமைந்துள்ளது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடற்படைத் தளபதியின் கொலையானது அலட்சியப்படுத்தக்கூடிய சம்பவமல்ல. அது மிகவும் ஒரு பாரதூரமான சம்பவமாகும்.

பாதுகாப்புப் படையினர்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**FOR SALE**

Bandages Available in Arthavan Pharmacy Kaithady. (C-6980)

**விற்பனைக்கு**

வியாபாரிகள் தங்கள் வியாபார ஸ்தாபனத்தை விளம்பரம் செய்வதற்கு தேவையான கலண்டர்களை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் தகுந்த கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். அச்சுப்பதிவு செய்யப்படாத கலண்டர்கள், சிலிப்புகள் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [எ-2588]

**வைத்தியம்**

செங்கண்மாரி, குடற்புண், தொய்வ, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைகசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-6954)

**சூரபன்மன் வதைபடலம்**

இலக்கிய அறிவற்றவர்களுக்கென, இலகுவில் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக திரு. வ. சிவராசசிங்கத்தினால் உரை எழுதப்பட்ட இந்நூல், யாழ். நகரின் எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். பிரதி ரூபா 75/-. (எ 2596)

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை.**

தற்காலிக உதவி விரிவுரையாளர் (தாவரவியல்/ இரசாயனவியல் / கணிதமும் புள்ளிவிபரவியலும் விலங்கியல் / பௌதிகவியல்/கணணி விஞ்ஞானம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரிய 1992 09-15 திகதியிடப்பட்ட விளம்பரம் சம்பந்தமானது.

தற்காலிக உதவி விரிவுரையாளர் (தாவரவியல்/ இரசாயனவியல் / கணிதமும் புள்ளிவிபரவியலும்/ விலங்கியல் / பௌதீகவியல்/கணணிவிஞ்ஞானம்) பதவிக்கு இறுதித்தேர்வுக்கு/விசேட பட்டதாரிக்கான தேர்வுக்கு தோற்றிபெறுபேறுகளுக்காக காத்திருப்போரும் விண்ணப்பிக்கலாம். மேற்படி பதவிக்கு ஏற்கெனவே, விண்ணப்பித்துள்ளவர்கள் மீண்டும் விண்ணப்பங்களை அனுப்பத்தேவையில்லை.

விண்ணப்பங்கள் யாவும் 1992-11-30 திகதிக்கு முன்னதாக சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனக்கிளைக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1992-11-13.

[எ-2594]

---

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## இறுதிப் பரீட்சைகள்
### கல்வி ஆண்டு - 1992

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் 1992ம் கல்வியாண்டு இறுதிப்பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 92-11-30ம் திகதிக்கு முன்னர் தங்கள் கல்விநெறிப் பகுதித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1992-11-16. (சி-2595)

---

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



விஸ்வகுரு சண்முகப்பத்தர்
## நாராயணசாமி அவர்கள்
SWORN TRANSLATOR
(DISTRICT COURT, JAFFNA.)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 - 04 - 1913 | 19 - 10 - 1992 |

கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடியில் வசித்தவருமான அன்னார் தமிழ், ஆங்கிலம், லத்தீன் சம்ஸ்கிரதம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவராயும் கிரந்த நாகர எழுத்துக்கள் தெரிந்தவராயும் அம்பிகை உபாசகராய் காளிதாஸரின் ஸியாமளா தண்டகம் மற்றும் லலிதா' திரிசதி [300 நாமம்] லலிதா ஸகஸ்ரநாமம் (1000 நாமம்) தியான சுலோகமாகவும் அர்ச்சனை ரூபமாகவும் மனப்பாடமாக இனிமையாகப் பாடும் திறன் உடையவராகவும் அனேக அந்தணப் பெரியோர்கள் பாராட்டப் பெற்றவராயும் திகழ்ந்தார்.

மற்றும் கல்லூரியில் படித்த ஷேக்ஸ்பியர், மில்ட்டன், அலெக்ஸாண்டர், நெப்போலியன் ஆகிய ஆங்கில மேதைகள் வீரர்களதும் ஆன்மீகப் பெரியார்களான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் சரித்திரப் பெருமை மிக்கதும் சுவாரஸ்யமான கட்டங்களை அடிக்கடி நமக்கு அழகாக எடுத்துரைத்தவரும் அனேக வியாபாரிகளுக்கும் மற்றும்பலருக்கும் உதவியாகவும் சந்தேக நிவர்த்திகள் செய்து வந்தவருமான நாராயணசாமி அவர்கள் மறைவு மேலும் அவரிடம் பல விஷயங்கள் அறிய ஆவலாய் இருந்த பலருக்கும் தமது சமூகத்தாருக்கு மட்டுமல்லாமல் வேறு சிலருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதுடன் ஈமக்கிரியைகளில் அஞ்சலிசெலுத்தியவர்கள் பங்குபற்றியவர்கள் சகலருக்கும் நன்றி கூறி அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

து. பஞ்சரெத்தின கோபால் (மைத்துனர்)
உறவினர், நண்பர்கள்.

[சி 6978]

---

ஈழநாடு நிறுவனமும், யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனமும் இணைந்து சமூகநலன் பேணும் திட்டத்திற்கமைய ஒரு வருடத்திற்கு இரண்டு மாதங்கட்கு அன்பளிப்பாக ஈழநாடு பத்திரிகைவழங்க முன்வந்துள்ளனர்.

விபரங்கட்கு:

## யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம்

33, பருத்தித்துறை வீதி. (ஆரியகுளம் சந்தி)
யாழ்ப்பாணம். [ஏ 2593]

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## கூறு விலை கோரல்

**விற்பனைக்கு:**

அ) வாளி : 8 அங்குல 785 வாளிகள், ஈயம் பூசாத நிலையிலுள்ளன.

ஆ) துணி : வெள்ளைப் பொலிஸ்ரர் (மாணவர்க்கு உகந்தவை)

இ) வற்றல் : கத்தரி, பாவல், மரவள்ளி, மோர் மிளகாய் ஆகியன.

**வாங்குவதற்கு:**

ஈ) பணப்பாதுகாப்புப் பேழை (SAFE) : புதியது அல்லது பழையது.

விற்பனைப் பொருட்களை எமது காரியாலயத்தில் பார்வையிடலாம். ஒவ்வொன்றுக்கும் (அ: ஒன்றின் விலை. ஆ: மீற்றர் விலை. இ: கிலோ விலை. ஒன்றின் விலை' கூறுவிலையைக் குறிப்பிட்டு தனித்தனி கடிதத்தில் சீல் இட்டு, மேற்பக்கத்தில் "கூறுவிலை கோரல்" எழுதி பதிவுத தபால் மூலமாக அல்லது நேரிலோ எமது காரியாலயத்தில் சேர்க்கவும் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி நாள் 25-1 -92 (பிற்பகல் 2-00 மணி). அன்று பிற்பகல் 4-00 மணிக்கு சீல் உடைத்துப் பரிசிலனை செய்யப்படும் கூறுவிலை அனுப்பியோர் இதில் பங்கு கொள்ளலாம்.


கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
17-11-92. (எ-2597)

---

உ

## ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி கு. மகேஸ்வரி (பூவா)

மலர்வு: 29-10-1949 உதிர்வு: 30-11-1991

திதி: அபரபக்க நவமி (18-11-92)

ஓராண்டு சென்றாலும் ஒருயுகந்தான் சென்றாலும்
உயிருள்ள வரையெங்கள உள்ளமது மறந்திடுமோ?
சீராட்டிப் பாராட்டி சிந்தைநிறைந் தன்புருகச்
சிந்துகின்ற கனிமொழியும் சிரிப்புதிரும் வதனமதும்
அகமதிலே நிழலாட அழுதழுது கண்ணீரால்
அஞ்சலியே செலுத்துகின்றோம் ஆண்டொன்று
-நிறைவாக

பிரிவுத்துயரால் வாடும்;
கணவன் - குணரத்தினம்
(சூரிமெக்கானிக்)
பிள்ளைகள்: 1. அருள்குமரன்
2. பாமினி
3. நேமினி
குடும்பத்தினர்

இமையாணன்,
யூனியனடி,
வல்வெட்டித்துறை,
(சி-6976)

---

**தன்னுயிரில் மேலாக தாயகத்தை நேசித்த மன்னர்கள் மாவீரர் மதி**

# 'புலிகளை வெல்வது கடினம்'

## உணரவைத்தவர்கள் மாவீரர்கள்

(யாழ்ப்பாணம்)

எதிரிப்படையிலிருந்துநழுவி நழுவி ஓடுகிறார்கள். எதிரியே ஏற்றுக்கொள்கிறான். புலிகளை வெல்வது கடினம்'' உணரவைத்தவர்கள் எங்கள் மாவீரர்கள்.

எதிரி மெல்ல மெல்லப்பின் வாங்குகின்றான். உயிரிலும் மேலாய் சுதந்திரத்தை வைத்தெண்ணும் வீர விடுதலைப் படை முன்னே கூலிப்படை முகாம் கொடுக்க முடியாது திணறுகிறது. இந்தப்புனிதப் போர்ப்படை விதையாகிப் போன எம் மாவீரர்களின் முனைகளாற் கட்டிலுறக்கம் பெற்ற மறவர் படை இதன் முன்னே எதிரியின் கனரகப் போர்க்கருவிகளாலும் நின்று பிடிக்க முடியவில்லை. உண்மையே, எம் மாவீரர்களின் இறப்பு வெறும் அர்த்தமற்ற இழப்பல்ல, வீரத்தின் உயிர்ப்பு.

இந்த மாவீரர்களின் வீழ்கையில் எமது வரலாறு எழுந்து கொண்டது. சாவிலே சரித்திரம் படம் போடப்பட்டது. இந்த வீரச்சாவுகள் உயிர்ப்புள்ள ஒரு தேசிய வீதத்தை உலகுக்கு அறிமுகப்படுத்துகின்றன.

மாவீரர் தம் இறுதி மூச்சு ஒவ்வொரு தமிழீழ மூச்சிலுமானதும் உயிர்மூச்சாய்க் கலந்து நிற்கிறது.

## மருத்துவ பீடாதிபதியின்

## ராஜினாமா விவகாரம்

### துணைவேந்தர் தலைமையில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் திரு. துரைராஜா தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விரிவுரையாளர்கள் பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மாணவ பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ராக்கிங் பிரச்சனைகள் மருத்துவ பீடாதிபதி இராஜினாமா என்பன குறித்து ஆராயப்பட்டன.

மருத்துவ பீடாதிபதியின் இராஜினாமாவுக்கு விரைவில் ஒரு சுமுகமான தீர்வுகாணப்படும் என துணைவேந்தர் திரு. துரைராசா தெரிவித்துள்ளார். (159)

## மாவீரர் வார ஏற்பாடுகள்

### அலங்கார வளைவு

(பண்டத்தரிப்பு)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அலங்கார வளைவு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கொக்குவில் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மற்றுமொரு அலங்கார வளைவு நிறுவப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள வீதி ஓரங்கள் அவ்வப் பகுதி மக்களால் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. (72)

### பாடசாலை துப்பரவு

(தாளையடி)

வடமராட்சி கிழக்கிலுள்ள சகல பாடசாலை வளவுகள் சுற்றாடல் துப்பரவு செய்யப்பட்டு சுற்றிவர மரக்கன்றுகள் நாட்டும் சிரமதானப்பணியில் பாடசாலை மாணவர்கள் ஈடுபடவிருக்கின்றனர்.

மாவீரர் நினைவாக வளைவுகள் அமைத்தல் அலங்காரப் பந்தல்கள் அமைத்தல், வீதிகளை அலங்கரித்தல் ஆகிய பணிகளில் இப்பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் பங்கு பற்றுகின்றன. (163)

### சிரமதானம்

(தாளையடி)

மாவீரர் வாரத்தில் பொது மக்கள் பாடசாலை மாணவர்கள், பொதுஸ்தாபனப்பிரதிநிதிகள் ஆகியோர் சிரமதானப்பணியில ஈடுபட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மருதன்கேணி கிராமிய வைத்தியசாலை, அம்பன் மத்திய மருந்தகம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பணிமனை குடத்தனைச்சந்தியில் அமைந்துள்ள பன்னிரு வேங்கைகள் நினைவுத்தூபி ஆகியன சிரமான மூலம் துப்பரவு செய்யப்பட்டு சுற்றிவர மரக்கன்றுகள் நாட்டப்படவிருக்கின்றன. (163)

## தமிழீழ மீட்பு நிதி

## கடன் மீளளிப்பு பெறுவோர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதிக் கடன் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தோரின் கடன் மீளளிப்பு திட்டததின் கீழ் கோப்பாய், உடுவில், மானிப்பாய், தெல்லிப்பளை பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரரின் விபரம் வருமாறு:

**கோப்பாய் - 1992**

மாசி
272, 429, 792, 2072, 3840, 4200, 4497, 4537,

பங்குனி
52, 54, 56. 425, 474. 678. 822, 1521.

சித்திரை
186, 712, 815, 816, 1209, 1752, 2920, 3725,

வைகாசி
43, 175, 536, 1633, 2204, 3236, 3354, 3425,

ஆனி
160, 335, 930, 1620 2233, 2519, 3279, 3829'

ஆடி
29, 115, 216, 4'0. 2665, 2772, 4716, 5518,

ஆவணி
264, 361, 578, 899, 1005, 1236. 5600, 6033.

புரட்டாதி
31, 153, 1574 1977 2625, 3191, 4240, 5020.

ஐப்பசி
13, 91, 241, 246, 648, 914, 1356, 2501.

கார்த்திகை
03, 412, 472, 984, 1748, 2201, 3053, 6343

**உடுவில் - 1992**

மாசி
93, 465, 924, 1360, 1731.

பங்குனி
294, 712, 716, 1213, 1254.

சித்திரை
76, 310, 377, 695. 613.

வைகாசி
171, 657, 1247, 1581, 2838

ஆனி
10, 83, 218, 526.

ஆடி
386, 823, 1278, 2618.

ஆவணி
34, 456, 758, 2902.

புரட்டாதி
59, 2147, 2464, 2514, 2885.

ஐப்பசி
65, 106, 553, 742, 1970.

கார்த்திகை
251, 331, 531, 645, 2765,

**மானிப்பாய் 1992**

மாசி
154, 829, 911, 1316, 2961. 3071.

பங்குனி
433, 436, 444, 2207, 2665, 3069,

சித்திரை
120, 312, 636, 2280, 3023, 3261

வைகாசி
85, 116, 432, 928, 3361, 3542

ஆனி
38, 97, 247, 738, 777, 1443, 3780,

ஆடி
214, 319, 386, 472, 790, 962, 2140.

ஆவணி
285, 352, 423, 614, 1068, 1507, 2353.

புரட்டாதி
92, 241, 429, 453, 2431, 2947,

ஐப்பசி
45, 82, 86, 752, 795, 2184

கார்த்திகை
130, 523, 669, 1293, 1534 2233

**தெல்லிப்பளை - 1992**

மாசி
21, 30, 415, 546 689, 2680, 3072, 4168,

பங்குனி
186, 376, 497, 882 1457, 2172, 2713, 4171

சித்திரை
358, 372, 751, 1029 1224, 1633, 1231 3126,

வைகாசி
89, 168, 935, 1328 1981, 2364, 3328, 3551,

ஆனி
685, 828, 936, 1600, 1840, 1869, 2673, 2729.

ஆடி
258, 304 342, 347 401, 1139, 3841, 4443,

ஆவணி
183, 192, 744, 2197 2394, 3076. 3613. 4321,

புரட்டாதி
27, 70, 134, 217, 472, 612, 682, 997,

ஐப்பசி
13, 279, 282, 309, 463, 738, 3025, 3129.

கார்த்திகை
302, 485. 502, 518, 545, 651, 1355, 3609.

★ தமிழீழ மாவீரர் நாள் — 1992

## மாவீரர்களே!

நீங்கள் களத்தில் மடியும் கடைசி நேரத்தில்
என்ன நினைத்தீர்?
அந்த நினைவைச் சுமக்கின்றோம்!
அதனை நிச்சயம் முடிக்கின்றோம்.

— தமிழீழ மாவீரர் பணிமனை

## பதிவு புத்தகமில்லாததினால்

## பிறப்பு பதிவுகள்

## இடம்பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

''கொழும்பியிருந்து கடந்த வருடம் பிறப்புப் பதிவுப் புத்தகங்கள் எமக்கு கிடைக்காததினாலேயே பத்தாயிரத்துக்கும் அதிகமான பிறப்புப் பதிவுகளை பதிவுசெய்ய முடியவில்லை''

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை பதிவாளர் திரு ந சத்தியமூர்த்தி தெரிவித்தார். அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்;

தற்போது பிறப்புப் பதிவுப் புத்தகங்கள் ஒழுங்காகக் கிடைப்பதினால் மேற்படி பதிவுகள் யாவும் எழுதப்பட்டு வருவதுடன், 1992ம் ஆண்டுக்குரிய பிறப்புப் பதிவுகள் யாவும் ஒழுங்கு படுத்தி பதியப்பட்டு வருகின்றது. இவற்றின் காரணங்களினால் தான் 1991-92 ம் ஆண்டுகளுக்கான பிறப்புப் பதிவுகளை உரிய காலத்தில் யாழ். செயலகப் பதிவாளர் பகுதிக்கு அனுப்ப முடியாது காலதாமதம் ஏற்படுகின்றது என்றார். (வி)

## குமாரி கப்பலில்

## தபால் பொதிகளை ஏற்ற

## ராணுவம் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பலில் தபால் பொதிகளை ஏற்றுவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் தொடர்ந்தும் அனுமதி வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்துவருவதாக தெரிவிக்கப் படுகிறது.

குமண கப்பலில் மட்டுமே தபால் பொதிகள் ஏற்றி இறக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் குமாரி கப்பலில் உணவுப் பொருட்களை ஏற்றி பருத்தித்துறையில் இறக்குவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இங்கிருந்து எந்த ஒரு பொருட்களையும் ஏற்றாது திரும்பி வரும்படியே தமக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட கப்பலின் அதிகாரி ஒருவர் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். (வி)

## காணி சம்பந்தமான

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணந்)

நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகத்தினர் நில அளவை, நிலவரைபடம் நில அளவைப் பயிற்சி, காணிப் பிரச்னைகள், காணிச்சட்டங்கள், காணிநிர்வாகம் காணிப் பதிவு இவற்றுடன் சம்பந்தப்பட்டோருக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 20ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலுள்ள குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் காணி நிர்வாகம், காணி உறுதிப்பரிமாற்றங்களின் போது அக்காணிக்குரிய நில அளவைப்படம் கட்டாயம் இருக்கவேண்டும். நில அளவைத் துறையைக் கம்பியூட்டர் மயப்படுத்துவதனால் உள்ள நன்மைகள். காணி விதிகளைத் தற்காலிக நடைமுறைக்கு ஏற்றவாறு புனரமைத்தல். நில, நீர், வான் அளவைகளில் நவீன விஞ்ஞானத்தைப் பிரயோகித்தல். காணிப்பிரச்னைகளில் காவல் துறையினரின் பங்கு. நில அபிவிருத்தியும் நிலத்தின் பயன்பாடும் நிலமின்றேல் நாமில்லை நில அளவையும். நில வரைபடமும் பொதுமக்களுக்கு ஆற்றும் பங்கு. இன்னும் வேறு விடயங்களிலும் அனுபவம் வாய்ந்த நிர்வாகத்தினர் அறிஞர்கள், அனுபவம் வாய்ந்த நில அளவையாளர்கள் சட்டத்தரணிகள் தேசத்தின் விடுதலைக்காய் உயிரைத்துச்சமெனக் கருதி குருதி சிந்தி மக்களைக் கவர்ந்த உண்மைத் தொண்டர்கள்பலரும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பங்குபற்றி இக்கருத்தரங்கு மக்களுக்குப் பயன்தரக்கூடியவாறு அமைய இத்துறையுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும், அத்துடன் நிலஅளவை, நில வரைபடம் அவற்றில் பயிற்சி பெற விரும்பும் ஆண், பெண் இருபாலாரையும் இத்துறையினில் உடனடி வேலைவாய்ப்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

**18-11-1992**

**(தமிழுக்கு கார்த்திகை 03)**

**புதன்கிழமை**

நவமி பி- இ- 1-43 வரை; மகம் பி- ப- 1-19 வரை; இராகுகாலம் நண்பகல் 12-09 முதல் 1-39 வரை சுப நேரம் மாலை 4-39 முதல் 6-09 வரை சித்தாமிர்தம்.

மேஷம்: மனக்கசப்பு, கால தாமத பணி, அலைச்சல்.

இடபம்: மருத்துவச் செலவு காரிய தடை, பணக் கஷ்டம்,

மிதுனம்: பொருள்சேர்க்கை, திடீர் நன்மை, புதிய மாற்றம்.

கடகம்: காரணமற்ற குழப்பம், கோபம், மன சங்கடம்,

சிங்கம்: புதிய மனிதர் சந்திப்பு, தொழில் சிறப்பு, பயணம்.

கன்னி: தொழில் தகராறு, அமைதிக் குறைவு, யோசனை.

துலாம்- சுற்றத்தவர் உதவி, கடன் வசூல், குடும்ப மகிழ்ச்சி.

விருச்சிகம்: சுப காரியம், புதிய முயற்சி, சகோதர உதவி.

தனுசு: மனப் பயம், சளித் தொந்தரவு, காரிய தடை.

மகரம்: குடும்ப தகராறு, முயற்சித் தடை. வெறுப்பு,

கும்பம்: தொழில் முதலீடு, அதிக வருமானம், மகிழ்ச்சி.

மீனம்: ஆபத்தில் தப்புதல், பாராட்டு சுப விரயம்,

— ஜோஸ்யர்

## அடையாள அட்டைப் படம்

தேசிய அடையாள அட்டைப்படம் பிடிக்க
ரூபா 40/-. விரைவாக வழங்கப்படும்

## குகன் ஸ்ரூடியோ

பருத்தித்துறை

(எ 2580)

# இந்தியா இலங்கைக்கு 25 கோடி ரூபா கடனுதவி

(புதுடில்லி)

இந்தியா இலங்கைக்கு 25 கோடி இந்திய ரூபாய்களைக் கடனாக வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடனுதவி கைத்தொழில் முதலீட்டிற்கும் மற்றும் சிறுதொழில் முதலீட்டிற்கும் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

# தெரிவுக்குழுவிடம் கூட்டணியின் யோசனை

(கொழும்பு)

தெரிவுக்குழு இம் மாதம் 28-ம் திகதி மீண்டும் கூடும் போது தமிழர் விடுதலைக் கூட்டணியும் முஸ்லிம் காங்கிரஸும் தமது யோசனைகளை முன்வைக்கவுள்ளன.

ஏற்கனவே தெரிவுக்குழுவிடம் ரெலோவும் ஈ-என்-டி எல்-எவ்வும் தத்தம் யோசனைகளை முன்வைத்துள்ளன.

தெரிவுக்குழு 28-ம் திகதி கூடும் போது மேற்படி இரு தமிழ் கட்சிகளினது யோசனைகளை விரிவாக ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

# மாவீரர் எழுச்சிநாள்
## கருத்தரங்கும் சிரமதானமும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு யாழ். குடாநாடு எங்கும் இன்று 18-ம் திகதி புதன்கிழமை நடைபெறும் கருத்தரங்குகளின் விபரம் வருமாறு:

வலிகாமம் கோட்டம் மட்டத்தில், சுழிபுரம் நாவலர் ச. ச. நி, சிறுப்பிட்டி ச. ச. நி, நவாலி வடக்கு ச. ச நி, உடுவில் காந்தரூபன் ச. ச. நி,

வடமராட்சிக் கோட்டம்:- வல்வெட்டி இந்து த. க. பாடசாலை, தென்மராட்சிக் கோட்டம், லெப். அருள் ச. ச நி கொடிகாமம் கொயிலாமணி ச. ச. நி

தென்மராட்சிக் கோட்டம்: பளை உதயதாரகை ச. ச. நி, மீசாலை விக்னேஸ்வரா பாடசாலை வடமராட்சி கிழக்குக் கோட்டம்: அம்பன் அ. த. க. பாடசாலை, வடமராட்சி வடக்குக் கோட்டம்; பொலிகண்டி கிழக்கு, சக்கோட்டை ச. ச. நி.

வலிகாமம் கிழக்குக் கோட்டம்: வில்லூன்டிப் பிள்ளையார் ச. ச நி நாவாந்துறை சென். நீக்கிலஸ் ச. ச. நி, சென். மேரிஸ் ச. ச. நி, அரியாலை சாம்சன் ச. ச. நி.

இன்று சிரமதானங்கள் நடைபெறும் இடங்களின் விபரம் வருமாறு: அரியாலை சாம்சன் முகாம், அச்சுவேலி பஸ் நிலையம் - சந்தை, தாவடி விழிசிட்டி கிராமம், காளியம்மன் ச. ச. நி. பண்ணைகம், வைத்தியசாலை, பிரதானவீதி, குருநகர் பகுதி, சென்-பற்றிக்ஸ் வீதி, அம்பன் கிராமிய வைத்தியசாலை.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் இன்று சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் நினைவுக்கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளன. (வி)

# பரீட்சை அனுமதி அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

1992 நவம்பர் 21, 22, 28ம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கும் இலங்கை வங்கியாளர் நிலைய இடைநிலை, இறுதிப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை குறிப்பிட்ட பிரதேச வங்கி தலைமை அலுவலகங்களுடன்க தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமபடி பரீட்சார்த்திகளை யாழ். கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (159)

## காணி சம்பந்தமான
(3-ம் பககத் தொடர்ச்சி)

பைப் பெறவிரும்புவோரை இந்நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு முழு நிர்வாகத்தினர் அழைப்பு விடுக்கின்றனர்.

மேற்படி நிகழ்ச்சி யாழ். விசேடதளபதி திரு தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறும்.

சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, உரும்பிராய், தெல்லிப்பழை, சங்கானைப் பகுதிகளில் இருந்து வருவோர் திரும்பிச் செல்வதற்கு வாகன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# ராஜினாமா வாபஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழக மருத்துவபீடாதிபதி பேராசிரியர் பாலசுப்பிரமணியம் தமது ராஜினாமாவை வாபஸ் பெற்றுள்ளார்.

அவர் நேற்று முதல் கடமைக்கு சமுகமளித்தார். (159)

# விரிவுரைகளுக்கு சமுகமளிப்பர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக் கழக சித்த மருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் பவானி தமது பதவியை இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து விரிவுரைகளைப் பகிஷ்கரித்துவந்த சித்தமருத்துவத் துறை மாணவர்கள் இன்று புதன்கிழமை முதல் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்க முடிவு செய்துள்ளனர். (159)

## கடற்படைத்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான சகல ஏற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாகைனதலைதயில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## படை உயரதிகாரிகளின்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை கொலை செய்யப்பட்ட சம்பவத்தை யடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது படைகளின் உயரதிகாரிகள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுக்கும் விசேஷ பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# உணவுப் பொருள்களை வழங்க முடியாதென கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். செயலகம் கைவிரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் ப. நோ. கூ. சங்கங்களுக்கு இனிமேல் தொடர்ந்து உணவுப்பொருள்களை வழங்கமுடியாது என்று யாழ். செயலக புனர்வாழ்வு, புனரமைப்புப் பகுதி தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் அரசு அனுப்பும் உணவுப் பொருள்கள் காலதாமதமாகி இங்கு வருவதனால் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் இலவச நிவாரணங்கள், மாணவர் உணவு முத்திரை உட்பட அனைத்து நிவாரணப் பொருள்களையும் எம்மால் வழங்கமுடியாது இருக்கின்றது.

இனிமேல் யாழ். மாவட்டத்திலுள்ள ப நோ கூ சங்கங்கள் தமக்கு வேண்டிய உணவுப்பொருள்களை தாமே கொழும்பிலிருந்து தருவித்துப் பொதுமக்களுக்கு விநியோகிக்கும்படி யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுமக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வழங்க வேண்டியது அரசின் கடமையாகும் அதைச் செய்வதற்கு அரசு தயக்கம் காட்டுவதுடன் எம்மையே உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யும்படி கூறுகின்றது.

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களைத் தருவிப்பதற்கு அரசு கப்பல் வசதிகளையாவது செய்து தரவேண்டும். அதைச் செய்வதற்கு யாழ் செயலகம் தவறும் பட்சத்தில் அடுத்த மாதம் முற்பகுதியில் மீண்டும் ஒரு வெகுஜனப் போராட்டம் யாழ் செயலகத்தின் முன்னால் நடாத்தப்படுமென்று ப. நோ. கூ. சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

யாழ் செயலகத்தின் இந்த முடிவை நாம் மறுபரிசீலனை செய்யும்படி இம்மாதம் 31ம் திகதிவரை கால அவகாசம் கொடுத்துள்ளோம். (வி)

## கிண்ணியாவில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்காஇராணுவத்தினரின் மேற்படி நடவடிக்கையை அடுத்து பெருமளவு தமிழ்மக்கள் இராணுவத்தினரால் முகாம வேலைகளுக்காக கைது செய்யப்படுவதும், இதனையடுத்துத் தமிழ்மக்கள் அப்பகுதியைவிட்டு இடம்பெயர்ந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## கடறபடைத் தளபதியின்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றிருப்பது, அரசாங்கம் ஒரு பயங்கர நிலையில் இருப்பதையே எடுத்துக்காட்டுகிறது என்று கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் கே. பி. சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சிகள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பொருளாதாரப் பிரச்னையால் சிக்கித் தவிக்கும் அரசு, யுத்தம் என்ற போர்வையில் பலவந்தமாக ஆட்சி நடத்திவருகிறது என்றும், கொழும்பு நகரில் போதிய பாதுகாப்பு வழங்க அரசு தவறிவிட்டது என்றும் குற்றம் சாட்டியுள்ளன. (பீ-இ)

## தற்கொலைப் படை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட இளைஞர் தங்கியிருந்த புறக்கோட்டை மலிபன் வீதியிலுள்ள விடுதியைப் பொலிசார் கண்டுபிடித்துவிட்டதாகவும், அந்த விடுதியிலேயே சம்பவம் நடைபெறுவதற்கு முந்திய தினம் இரவு அவர் தங்கியிருந்தார் எனவும், குறிப்பிட்ட விடுதியின் பொறுப்பாளர் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவிக்கையில், சம்பவம் நடைபெற்ற இடத்தில், குறிப்பிட்ட இளைஞரின் சாரதி அனுமதிப் பத்திரத்தின் சிதறிய துண்டுகள் காணப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட இளைஞரின் தேசிய அடையாள அட்டை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், பெயர் மற்றும் விபரங்கள் அவ் அடையாள அட்டையில் காணப்பட்டதாகவும், இச்சம்பவத்தில் தொடர்ச்சியாக மேலும் பலர் கைது செய்யப்படலாம் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட இளைஞருக்கு மோட்டார் சைக்கிளை விற்றவர்கள் கம்பஹாவை சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# கனடாவில் விபத்தில் சிக்கி நெல்லியடி பெண் பலி

(நெல்லியடி)

கனடாவிலுள்ள பிள்ளைகளிடம் சென்ற நெல்லியடிப் பெண்மணி ஒருவர், வாகன விபத்தில் சிக்கி அங்கு பரிதாபமாக மரணமானார்.

நெல்லியடியைச் சேர்ந்த திருமதி கதிர்காமநாதன் சரஸ்வதி (வயது-55) என்பவர் கடந்த 10-ம் திகதி கொழும்பிலிருந்து விமானம் மூலம் கனடாவுக்குப் போய்ச் சேர்ந்தார்.

அங்கு இவரது வருகைக்காக தனது மோட்டார் கார் சகிதம் காத்து நின்ற இவரது மகன் காரில் ஏற்றிக்கொண்டு தமது இருப்பிடத்துக்குக் கொண்டுசெல்கையில் வழியில் ஏற்பட்ட வாகன விபத்துஒன்றில் சிக்குண்டு தலையில்பலத்த காயமடைந்து மரணமானார். (160)

## மூன்று புலிகள
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞத்துரை (சரவணமுத்து காந்தரூபன் - முல்லைத்தீவு), 2-ம் லெப் தம்பி (ஐயாத்துரை தர்மலிங்கம் - எழுதுமட்டுவாள், கிளாலி) ஆகிய போராளிகளே வீரச்சாவை தழுவியவர்களாவார். (க)

## புலிகள் இயக்கம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருக்க வேண்டுமென்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் செய்திக்கு சகல வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தும் குறிப்பிடத்தக்கது. (சி)

## போரை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதாவது விழித்துக் சொள்ளவேண்டும். நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் இது ஒரு பெரும் அச்சுறுத்தலாகவே அமைந்துவிட்டது.

எனவே பாதுகாப்பு மற்றும் தாக்குதல் நடவடிக்கைகளில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தவேண்டும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ)

## மணலாறு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட அதிரடித்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொலைப்பட்டனர். நவீனரக ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

சுமார் 20 நிமிட நேரம் நீடித்த இத்தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத படையினர் இழப்புகளுடன் முகாம் நோக்கி ஓட்டமெடுத்தனர்.

இத்தாக்குதலில் ஏ. கே. இலகு இயந்திரத் துப்பாக்கி -01, அதற்குரிய ரவைக்கூடு -01, அதற்குரிய விங்குகள் -263, ரி-56 ரக துப்பாக்கி-02, அதற்குரிய ரவைக்கூடுகள்-11, நடுத்தர ரவைகள்-876, ஜே. ஆர். கைக் குண்டுகள்-04, ஏ. கே. ரவைக்கூடு தாங்கி-04, இராணுவ தலைக்கவசதொப்பிகள்-05, இராணுவ சப்பாத்து 01 சோடி, இராணுவபட்டி -01, மழைக்கவசம்-01 ஆகிய ஆயுத மற்றும் உபகரணங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. (க)

# பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

மருத்துவபீட மாணவர் ஒருவர் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் இடைநிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் இன்று புதன்கிழமை தமது வகுப்புகளை பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளனர்

இன்று முதல் சகலவிரிவுரைகளையும், செய்முறை பயிற்சி வகுப்புக்களையும் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (ரி)

# இன்று

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 17 வயதிற்குக் கீழ்ப்பட்ட மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி, இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் அளவெட்டி அருணோதயாவை எதிர்த்து அராலி இந்து மோதும். (சி)

## இரண்டு அடி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டுவருவதாகவும் இதனை வைத்துதுப்பு துலக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## மீனவர் மீது
(1 ம்பக்கத் தொடர்ச்சி)

கோட்டையைச் சேர்ந்த ராதா என்பவர் காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேரே கப்பல்கள் தரித்து நிற்கும் இடத்துக்கு மிக அண்மையில் வைத்தே வேட்டுக்களை கடற்படையினர் தீர்த்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது, (61-56)

## நியூஸிலாந்து
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிரிக்கெட் சபையின் தலைவர் பீற்றர் மக்னமட் நேற்றுக் காலை கொழும்பு வந்து தனது அணியுடனும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடனும் பல மணி நேரம் கலந்தாலோசித்தபின் வீரர்களின் முழுப் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டபின் தமது சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்தும் மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்தார். (சி)

இப்பத்திரிகை ""ஈழநாடு"" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8